ஆர்யதர்மம்.

புத். 3.
ஸஞ். 4.

பிங்களஞு சிராவண சுத்தபஞ்சமி.

மாயாசாஸ்திரம்.

முதல் பாகம்.

உலகத்தில் உள்ள பிராணிகள் யாவரும் அறிய வேண்டிய விஷயம் தத்துவ ஞானம். எக்காலத்திலும் அழிவற்றதும், துக்கமற்ற ஆநந்த ரூபமாகவும், பிரகாசத்தைக் கொடுக்கும் ஞான ரூபமாகவும் இருக்கும் வஸ்துவை அறிய வேண்டும். அவ்வஸ்துவின் ஸ்வரூபம் ஜீவர்களின் கர்மவாஸனைப் பலத்தால் அறியக் கூடாமல்போய் விடுகிறது.

அவ்வஸ்துவின் ஸ்வரூபம் மறைந்து விடவே, ஜீவர்களின் அஞ்ஞானத்தால் அவ்வஸ்துவை விபரீதமாக அறிந்து கொள்ளுகிறார்கள். தங்கள் யுக்தி பலத்தால் விபரீதமாக அறிந்துகொண்டதை ஸ்தாபிக்க எத்தனப்படுகிறார்கள். ஆகையால் விபரீத ஞானம் மாறி நாம்வஸ்து ஸ்வரூபத்தைச்சரியாக அறியவில்லை என்கிற ஞானம் ஏற்பட்டு விசாரணைசெய்து ஸ்வரூபத்தை அறிந்து கொள்வதுதான் ஜீவர்களின் முக்கிய கடமை. அவ்விதம் செய்யாத வரையில் அந்தனால் நடத்தப்பட்ட அந்தன் அடையும் கதியை அடைவார்கள்.

2. ரஜ்ஜு, சுக்தி முதலிய பதார்த்தங்கள் கண்ணுக்கு முன் நிற்கையில், கண்களின் தோஷத்தாலும், மந்த அந்தகாரத்தாலும், ரஜ்ஜுசுக்திகளின் ஸ்வரூபத்தை அறியச் சக்தியற்றவர்களாகி, அவைகளை ஸர்ப்பம் என்றும் ரஜதம் என்றும் நினைத்தும் ஸர்ப்பத்தைக் கண்டு பீதியையும்ரஜதத்தைக் கண்டு சந்தோஷத்தையும் அடைவதை யாவருமறிந்திருக்கிறோம். ஸர்ப்பமும் ரஜதமும் வாஸ்தவமாக இல்லை என்று அறியாத வரையில் மனத்தில் ஹர்ஷ விஷாதம் குறையுமா? அவைகளின் ஸ்வரூபத்தை அறிந்து கொண்டால் ஹர்ஷ விஷாதம் நிலை நிற்குமா? ஆகையால் எந்த வஸ்துவையும் நாம் விசாரித்து அறிந்து கொள்ளாத வரையில் அதில் விபரீத ஞானம் உண்டாவதற்கு ஹேது ஏற்படும். தாகத்தால் பீடிக்கப்பட்டவன் வனத்தில் ஸஞ்சாரம் செய்ய, நல்ல ஜலமுள்ள குளத்தில் ஜலத்தில் உண்டாகும் பூண்டுகள் மூடியிருப்பதைக் கண்டு பூண்டுகளைத் தள்ளிவிட்டுக் கீழாக இருக்கும் ஜலத்தை குடித்துத் தாகத்தைத் தீர்த்துக் கொள்ளாமல் தூரத்தில் பிரகாசிக்கும் சூரியரச்மிகளை (மிருகதிருஷ்ணை என்று சொல்லப்படும் கானல்) ஜலமாக நினைத்து வேகமாகச் சென்றால்

தாகம் சமனமாகுமா? ஒரு பெரிய வனத்தில் செல்லும் பிரயாணி, தன் தலையில் தூக்கமுடியாத மூட்டையுடனும், பக்கங்களில் எரியும் காட்டுத் தீயினால் பொசுக்கப்பட்டும் காற்றினால் கிளப்பப்பட்ட புழுதிகளால் கண்கள் கலக்கப் பட்டும், மேடுபள்ளங்களுடன் கூடிய வழியில் ஸஞ்சாரம் செய்தும், தன் ஒத்தாசைக்கு வைத்திருக்கும் தடியை இழந்துபோயும், வழிதெரியாமல் வருத்தமடைய துஷ்ட மிருகங்கள் கர்ஜனையைக் கேட்டு மனுஷிய ஸஞ்சாரமுள்ள மார்க்கம் என்று நினைத்து அவ்விடம் செல்வதுமாக இருந்தால் எந்தக் காலத்தில் வனத்தைத் தாண்டுவான். ஜீவர்கள் அநேக ஜன்மாக்களில் செய்திருக்கும் கர்ம வாஸனையால் அஹங்காரம் மேலிட்டு மற்றவர்களின் பெருமையைக் கண்டு சகிக்காதவர்களாகி எப்பொழுதும் மனத்தைத் தபிக்க செய்துகொண்டும் குரோதாதிகளால் பாதிக்கப்பட்டு கிருத்தியா கிருத்யம் தெரியாமலும் காமத்தால் பிடிக்கப்பட்டு ஆபத்து காலங்களிலும் ஒத்தாசை செய்யக் கூடிய புத்தியை இழந்தும் சரியான மார்க்கத்தை அறிந்து கொள்ளாமல் விபரீத மார்க்கங்களைக் காண்பிக்கிறவர்களை நம்பி நடவடிக்கைகள் நடத்தினால் அந்த ஜீவர்களுக்கு ஞானம் ஏற்படுமா? நல்ல கதி அடைவார்களா? கிருஷி செய்பவன் பூமியை உழுது மேடு பள்ளம் இல்லாமல் நிறவி, விரைகள் முளைக்கும்படியாக நல்ல தண்ணீரைக் கட்டி, களைப் பிடுங்கிச் சாகுபடி செய்தால் அல்லவோ பயிர் விருத்தியாகும். மனத்தில் விஷம புத்தியுள்ளவன் அதில் உள்ள தோஷங்களைக் கண்டுபிடித்து அவைகளை நிவர்த்தி செய்ய வேண்டாமா? ஜலத்தைக் காய்ச்சி அதின் ஸ்வபாவத்தைக்கெடுத்து வெந்நீராகப் பாய்ச்சினால் பயிர் விருத்தியாகமாட்டாது. சாஸ்திரங்களின் ரஹஸ்யார்த்தங்களை அறிந்து கொள்ளாமல் விபரீதார்த்தம்

சொல்லுகிறவர்களால் உபதேசிக்கப்பட்டால் ஞானம் விருத்தியாகமாட்டாது. ஞானமடையச் சாதனங்கள் ஏற்பட்டிருக்கையில் அவைகளைச் சரியாக அறிந்தவர்களைக்கொண்டு உபதேசம் பெறவேண்டும். நடுச் சமுத்திரத்தில் முழுகிப்போவனுக்குத் தெய்வீகமாகப் படகு கிடைத்தாலும் அதை ஓட்டிக் கரைசேர்க்கச் சாமார்த்தியம் உள்ள ஓடக்காரன் இல்லாவிடில் படகு என்ன சுகத்தைக் கொடுக்கும்.

நம்முடைய அக்ஞானத்தைப் போக்கடித்து ஞானத்தைப் பிரகாசிக்கச் செய்பவன் தான் குரு (गुकारस्त्वन्धकारः स्याद्रुकारस्तन्निरोधकः । अन्धकारनिरोधित्वाद्गुरुरित्याभिधीयते) அஞ்ஞான இருளை போக்கடிக்காமல் இன்னும் இருட்டான பிரதேசத்திற்குக் கொண்டு போகிறவன் குருவாக மாட்டான். நம்முடைய சாஸ்திரங்களின் ரஹஸ்யார்த்தங்களைச் செம்மையாக அறிந்த விமதஸ்தர்கள் முன்னிலையில் நம்முடைய சாஸ்திர ரஹஸ்யங்களையும் கௌரவத்தையும் ஸ்தாபித்த மஹான்கள் காலம் சென்றாலும் அவர்கள் எழுதிய கிரந்தங்கள் மூலமாக உபதேசம் பெறக்கூடாதா? அவ்விதம் செய்யாமல் நம்முடைய சாஸ்திர ரஹஸ்யங்களை அறிந்துகொள்ளாதவர்களும் தங்கள் யுக்தியால் சாதித்து விடலாமென்று நினைத்து நமமுடைய சாஸ்திரங்களின் அர்த்தங்களை விபரீதமாக நம்முடைய தேசத்திலேயே உபதேசம் செய்பவர்களின் வார்த்தையை அங்கீகரிக்கலாமா? யுகத்திற்குத் தகுந்தபடி புத்தி குறைவு உண்டாகுமென்று அறிந்து பிரதி துவாபர கலியுகங்களில் ஹரிஹரர்கள் கிரந்த கர்த்தாக்களாகவும் பாஷ்ய கர்த்தாக்களாகவும் அவதரிக்கிறார்கள் என்றும் அவைகளின் அபிப்பிராயங்களையும் அந்தந்தக் காலங்களில் வித்வான்கள் அறிந்து யாவருக்கும் ஞானம் உண்டாகும்படி

சொல்லுவார்கள் என்றும் நம்முடைய புராணங்களில் சொல்லப்படவில்லையா?

कालेन मीलितधियामवमृश्य नृणां स्तोकायुषां स्वनिगमो बहुदूरपारः ।
आवाहितस्त्वनुयुग स हि सत्यवत्यां वेदद्रुम विटपशो विभजिष्यति स्म ॥

भागवतम्. 2. स्कन्धम्.

சிவ புராணம் ருத்திர ஸம்ஹிதையில் 'சங்கரன் பாஷ்கர்த்தாவாகவும், ஹரி வேதகர்த்தாவாகவும் பிரதி த்வாபர கலியுகங்களில் அவதரிக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீ வித்தியாரணியர் முதலிய மஹான்களும் பதஞ்சலி முதலிய ருஷிகளும் ரஹஸ்யார்த்தங்களை யாவரும் அறியும்படி சுலபமாக எழுதி இருக்கிறார்கள். தேச பாஷைகளிலும் இப்பொழுது அநேக பண்டிதர்கள் பிரசங்கம் செய்து துரூஹமான விஷயங்களைச் சுலபமாக அறியும்படி அச்சிட்டிருக்கிறார்கள். இவ்விதமாகத் தத்வத்தை அறிய வேதங்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட அநேக மார்க்கங்களிருக்கையில் அவைகளில் செல்லாமல் நம்முடைய ஹிதத்தைக் கவனிக்காதவர்களுள் உபதேசம் செய்யும் மார்க்கத்தில் செல்வதால் என்ன பலன் உண்டாகும்? விசேஷமாகக் கலியுகத்தில் ஜீவர்களின் புத்தியைக் கலக்க விபரீத ஞானோபதேசம் செய்ய பல மார்க்கங்கள் ஏற்படும் என்று நம்முடைய பூர்வீகர்கள் புத்திக் கூர்மையால் அறிந்து அவைகளில் பிரவிருத்தி உண்டாகாமலிருக்கும்படி உபதேசம் செய்திருக்கிறார்கள். ஆகியில் உபதேசம் செய்த கிரந்த கர்த்தாக்களே இக்காலத்தில் ஆக்ஷேபிக்கும் வீண் வாதங்களை அறிந்துகொண்டே அவைகளுக்குச் சமாதானமும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் விபரீத மார்க்கத்தில் உபதேசிக்கப்படும் விஷயங்களை அறிந்து கொள்வதில் எவ்வித தோஷமுமில்லை: தர்மம் அறிந்து நடத்த வேண்டுமானால் அதர்மத்தை அறிந்து

கொண்டு அதில் நிவிருத்தி வரவேண்டாமா? அதர்மத்தில் ஹேயபுத்தி ஏற்படாத வரையில் தர்மத்தில் கௌரவம் ஏற்படுமா? நாம் நடக்கும் மார்க்கத்தில் அநேக விக்னங்கள் ஏற்படும் என்பதை அறிவதும் அதை நிவர்த்தித்து கொள்ள நாம் முயற்சி எடுத்துக் கொள்வதும் அவசியமான கடமை. முன் காலங்களிலும் அநேக பக்தர்களுக்கும் அதர்மத்தில் பிரவிருத்தி ஏற்பட்டதால் மார்க்கம் தவறி நாசமடைந்தார்கள் என்று புராணங்களில் சொல்லப் பட்டிருக்கிறது. நம்முடைய சாஸ்திர ரஹஸ்யங்களை அறிவதும் விபரீத ஞான உபதேசம் செய்பவர்களின் மதத்தின் தோஷத்தை அறிவதும் அதில் பிரவிருத்திக்காமலும் சிரேயஸ்ஸைக் கொடுக்கக்கூடிய நம்முடைய ஸ்வதர்மத்தை காப்பாற்றுவதும் நம்முடைய முக்கிய கடமை. அவ்விதம் செய்வதில் நமக்குச் சிரமம் ஏற்பட்டாலும் அது சிரேயஸ்ஸைக்கொடுக்கும். ஆகையால் அவரவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தர்மத்தை அனுஷ்டிக்கவேண்டும். பிறர்களுக்கு விதிக்கப்பட்ட தர்மானுஷ்டானத்தால் பயம் ஏற்படும். விபரீத ஞானத்தை உபதேசிப்பவர்களின் வார்த்தைகளைக் கவனியாமல் உண்மையான அர்த்தத்தை அறிய முயல வேண்டும்.

3. மாயா சாஸ்திரம் என்பது என்ன? அது என்ன காரணத்தினால் ஏற்பட்டது? புதிதாக ஏற்பட்டதா அல்லது முன்னமேயே ஏற்பட்டிருந்ததா? மாயா சாஸ்திரத்தில் என்ன உபதேசம் செய்யப்படுகிறது. எவர்களாவது அதை அனுஷ்டித்தார்களா? இவைகளைப் பற்றி விசாரிப்போம்.

"युक्तिहीनप्रकाशस्य संज्ञा मायेति कथ्यते".

எவ்வித யுக்திக்கும் நிலைநிற்காமலிருந்தாலும் பிரகாசிக்கும் தன்மை உடையது மாயை. தத்வ ஞானம் உண்டாகும்

வரையில் உண்மைபோலும் தத்வ ஞானம் அறிந்த பிறகு உண்மையற்றதுபோலும் தோன்வது மாயை.

(मिथ्यात्वं नाम बाध्यत्वं सम्यग्ज्ञानोदये सति । तत्वज्ञानापनोद्यत्वं बाध्यत्वं)

தர்மமார்க்கத்தைக் காட்டி நடத்தவேண்டிய மார்க்கத்தை விதிப்பது சாஸ்திரம் சுருதி ஸ்மிருதி இதிஹாஸ புராணங்களில் விதிக்கப்பட்டிருக்கும் நியமனங்கள் சாஸ்திரத்தால் விதிக்கப்பட்டவைகள். மாயா சாஸ்திரம் என்பது மேல் பார்வைக்கு நியாயம் போலும், யுக்தியில் சாதிக்கக் கூடியதும், சுருதி முதலிய சாஸ்திரங்களின் ரஹஸ்யார்த்தம் அறியாதவரையில் உண்மை போலும் அறிந்த பிறகு பிரயோஜனமுற்றதென்று தெரியக்கூடிய மார்க்கத்தை உபதேசிக்கும் சாஸ்திரம். சுறுதி ஸ்மிருதிகளால் விதிக்கப்பட்ட மார்க்கத்திற்கு விரோதமாகவும், வர்ணாசிரமாதி தர்மங்களை அனுசரிக்காததும், கர்மவாதத்தை உபதேசிப்பதுமான சாஸ்திரம் மாயா சர்ஸதிரம். தர்மம் பிரகாசிப்பதுபோல தோன்றுவதும் தமசுப்பிரதானமான தர்மங்களை உள்ளடக்கியதுமானதும் விபரீதார்த்தத்தைக் கொடுக்கும்படியானதுமான சாஸ்திரம் மாயா சாஸ்திரம். இப்பொழுது இவ்விதமான சாஸ்திரம் யுக்தி வாதத்தால் சாதிக்கப்பட்டு வேதநிந்தை செய்பவர்களால் உபதேசிக்கப்படுகிறது. முன் காலத்திலும் இவ்வித யுக்திவாதம் ஏற்பட்டிருந்ததாக புராணாதிகளால தெரியவருகிறது. திருபுரர்களும், வேனமஹாராஜனும் தர்மத்தில் பிரவிருத்தி உள்ளவர்களாக இருந்தும் ஸாதுக்களை ஹிம்சை செய்ததால் பாபம் மேலிட்டு புத்தி மோஹம் அடைந்து தர்மமார்க்கம் தவறி மாயா சாஸ்திரத்தைக் கைக்கொண்டு நாசமடைந்தார்கள் என்று சிவபுராணம் ருத்திர ஸம்ஹிதா யுத்த கண்டம் 4,5, அத்யாயங்களிலும், பத்ம புராணம் பூமி கண்டத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. மாயா சாஸ்தி

ரத்தின் தத்வங்கள் விஸ்தாரமாக அவைகளில் விவரிக்கப் பட்டிருக்கின்றன. அவைகளைச் சுருக்கமாக அடியில் கண்டபடி எழுதுகிறேன்.

4. அசுரர்களான திருபுரர்கள் சிவனை உத்தேசித்து வெகுகாலம் தபசு செய்து சிவனைத் தவிர வேறு ஒருவராலும் மரணம் ஏற்படக் கூடாதென்று வரன்வாங்கியும் துஷ்டர்கள் சகவாசத்தால் சாதுக்களான தேவதைகளை ஹிம்சிக்க அதை அறிந்த விஷ்ணு, தேவர்களுடையும் வருத்தத்தைப் பார்த்து சகிக்காமல் திருபுரர்களின கர்வததை அடக்க உபாயம் தேடினார். தர்மத்தில பிரவிருத்தி உள்ளவர்களை ஆபிசாரத்தால் கொல்வது சுலபமல்ல. எதுவரையில் வேததர்மத்தில் பிரவிருததியும், சங்கரார்ச்சனையும் ஏற்படுகிறதோ, அதுவரையில் அவர்கள் நாசமடைய மாட்டார்கள், என்று நினைத்து தர்ம மார்க்கத்திலிருந்தும் நழுவும்படியான மார்க்கம் தேடுவதுதான் சுலபமென்று தீர்மானம் செய்து கொண்டார். தன் மாயை பலத்தால் ஒரு புருஷனை சிருஷ்டித்து மாயா சாஸ்திரத்தை உபதேசம் செய்து "இந்த சாஸ்திரத்தை நீ விஸ்தாரப்படுத்தவேண்டும். திரிபுரர்களுக்கு உபதேசம் செய்தபிறகு மருஸ்தலி என்கிற இடத்தில் வசித்துக் கலியுகத்தில் விசேஷமாக மாயா சாஸ்திரத்தை உபதேசம் செய்து சிஷ்யர்களுடன் கூட சாஸ்திரத்தை பிரகாசிக்கச் செய்ய வேண்டு"மென்று ஆஞ்ஞாபித்தார். ருஷி, யதி, ஆசிர்ய, உபாத்தியாய என்கிற 4 சிஷ்யர்களுடன திருபுரர்களிடம் சேர்ந்து தீக்ஷை செய்வித்து அவர்களை சிஷ்யர்களாக்கிக் கொண்டார்.

(இன்னும் வரும்.)

பி. வி. கிருஷ்ணசாமி அய்யர்.

பக்தி.

(முன்தொடர்ச்சி.)

அவை வருமாறு:—மந்ததரபக்தி, மந்தபக்தி தீவ்ரபக்தி, தீவ்ரதரபக்தி என்று.

1. மந்ததரபக்தி:—அரக்கானது அனலில் உருகுவது போன்றது. அனலில் வைக்கப்பட்டவரக்கு வெகு நேரஞ் சென்று வேனற்சூடுமிக்கதாக்கிப் பிறகு சிறிதுருகுவது போன்று, இறைவனது பக்தி மிகும் பக்தர்களைப் பல்காற் றெரிசித்தும், அவ்வீசன் றிருவிளையாடல்களைச் சரித்திர வாயிலாக, அன்னாரிடமிருந்து பலகாலமுஞ் செவியேற்றும், பக்த லக்ஷணமாய்ப் பொருந்துமக்கந்திருநீறாதிய வனைத்தையும் பல்காற்றரித்தும், கருணையங்கடலாய் நிற்குங் கங்கைவேணியனாதியர் கழலிணைப் பல்காலஞ் சிந்தித்தும் வருபவருக்குண்டாகுஞ் சிறுமன நெகிழ்ச்சியே, மேற்கூறியவாறு மந்ததரபக்தி.

2, மந்தபக்தி மெழுகு வெயிலிலுருகுவதுபோல் வதாகும். வெப்பத்திலிடப்பட்ட மெழுகு, சிறிதுநேரஞ் சென்றவுடன், உஷ்ணம் தாக்கப் பொருக்காதெவ்வாறு சீக்கிரமுருகின்றதோ! வத்தன்மைபோல், கடவுளது தொண்டர்குழாத்தைச் சில காற்றெரிசித்தும், பகவத் கருணையையும் பக்தர் விலாஸத்தையும் பெரியார் வாயிலாகச் சிறிதுகாலஞ் செவிபுகுத்தும், அடியவர் கோலஞ் சில காலம் தரித்துமிருப்பவற்குண்டாகுமன நெகிழ்ச்சியே முதல் வரைந்தவாறு "மந்தபக்தி"

3. தீவ்ரபக்தி:—அனலில் நெய்யுருகுவது போன்றது. அக்னியில் நெய் யெவ்விதம் வைக்கும் போதெல்

லாம் நெகிழுமோ !! அங்ஙனமே திருத்தொண்டரை காணும் போதும், திருநின்ற மாக்கதை செவி மடுக்கும் போதும், திருக்கோயில் செல்லும் போதும், திருவடிச் சிந்திக்கும் பொழுதும், திருச்சன்னிதானம்; திருவகத்தே தோன்றும் பொழுதும், அடிக்கடி சீக்கிரமாகவே பெருகும் மனநெகிழ்ச்சியே "தீவ்ரபக்தி"

4. தீவ்ரதர பக்தி:—நீரில் தைலபிந்துப் போல்வது. தைலபிந்துவானது, இடை விடாது ப்ரஸரிப்பது போலும். வீழ்ந்த விடத்தில் எவ்வாற்றானு மழிக்க முடியாத தடம் போலவும், ஐந்து புலன்களும் ஓரிடம் நின்றும், நான்கு காணங்களுஞ் சிந்தையாகியும் மூன்று குணங்களும், முதற் குணமாய்ப் பரிணமிக்கவும், கடவுள் பதம் மனஞ் சேரவுடனே, சாந்தன் வண்ணமாய் நின்றுலகை யுவர்த்துப் பேரானந்தஞ் சுவைத்து தானே சிவமெனப் பாவித்து தன்னையன்றிப் பரமன் வேறில்லையென்று நினைத்து, எல்லையிற் சுகமாய் நிற்கும் நிலையே தீவ்ரதர பக்தி. இதனைச் சிறிதுற்று நோக்குவோமாயின்,

"ஐந்து பேரறிவுங்கண்களே கொள்ள, அளப்பருங்-
[கரணங்களுன் குஞ்
சிந்தையே யாககுண மொருமூன்றுந் திருந்து சாத்-
[துவிகமேயாக
இந்துவாழ் சடையாராடு மானந்தவெல்லை யிறனிப்-
[பெருங் கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத் துட்டிளைந்துமாறி லாமகிழ்-
[ச்சியின் மலர்ந்தார்"

என்ற வித்திருப்பதிகத்தானே கொள்ளக்கிடக்கின்றது. மேலுமிப்பக்தியினை மற்றொரு விதமாகவும் கூறுவாருமுளர். பின் வரும்.

मातृभक्तिः, पितृभक्तिः, गुरुभक्तिः, राजभक्तिः, दैवभक्तिः,
मातृभक्तिः ।:— मासान्दशोदरस्थं या धृत्वा शूलैः समाकुला ।
विविधैर्वेदनादुःखैः प्रसूयेत विमूर्च्छिता ॥
प्राणैरपि प्रियान्पुत्रान्मन्यते सुतवत्सला ॥
कस्तस्या निष्कृतिं कर्तुं शक्तो वर्षशतैरपि ॥

என்று வியாஸபகவான் கூறிய விக்திருவாக்கைச் சற்றே நிதானிப்போமாயினிவ்வரிய விஷயம் விளங்காமலிராது.

பத்து மாதம் சுமந்தும், சூல் முதலிய வேதனைகளாற் பீடிக்கப்பட்டும் மிகுதியான மூர்ச்சை யடைந்துமீன்றெடுத்த தன்மகனைத் தனதுயிரினுக்கும் மேம்பாடுடையதாய்க் கருதுகின்றுள்ளாதலின், அன்னவளுக்குக் கைம்மாறு செய்வதற்கு, शतायुः पुरुषः। என்றபடி ஜீவித கால முழுவதுமன்னைக்குப் பணிவிடை செய்வதைத் தவிர வேறெவ்விதமாவது பிரத்யுபகாரஞ் செய்யக்கூடுமாற்றலுடையயவன் யாவன்? ஆகவே “அன்னையும் பிதாவு முன்னெறி தெய்வ”மென்று கூறப் பெற்ற முதுமொழியைக் கடைப்பிடித்தொழுகுவது நமது கடமையென்று விளங்கும் இதற்குத் தக்க சான்றாக:—தசரதனது கிரீடா நாயகியான கைகேயீ கூனியின் சூழ்ச்சியால், தனக்குதவ வேண்டியவிரண்டுவரங்களையுங் கேட்டு, அவ்வரத்தில், ஒன்றற்கு தனது தாத்திற்றோன்றிய பரதனுக்கு பட்டமும் மற்றொன்றுக்கு பதினன்கு வருடம் சக்களத்தி மகனை விராமனுக்கு வனவாஸமும் வேண்டுமென்றரசனிடந் தெரிவிக்கவும் ஸத்யத்திற்குப் பயந்த தசரதனது உத்திரவை, ஸ்ரீ ராமபிரானிடம் கூறும் வண்ணம்.

“ஆழி சூழுலகமெல்லாம் பரதனே யாள நீ போய்த்
தாழிருஞ் சடைகடாங்கித் தாங்கருந் தவ மேற்
[கொண்டு

பூழிவெங்கானை நண்ணிப் புண்ணியத்துறைகளாடி
யேழிரண்டாண்டில் வாவென் றியம்பினனரசனென்
[றாள் " (கம்பர்)

கடலாடை சூழ்ந்தவிப்பூவுலகத்தை யெனதருமைப் புதல்வனான பரதன் பரிபாலனஞ்செய்யவும், நீ ஜடாபாரந்தரித்தும் தவசின் வேடம் பூண்டும், புழுதிகள் பரக்கும் பாலைவனஞ் சென்றும் புண்ணிய தீர்த்தங்களிற் சென்று நீராடியும், பிறகு பதினான்கு வருடம் சென்று, இங்கு வரவேண்டுமென்று சக்ரவர்த்தியானவுனது தகப்பனது கட்டளை, என்று கூறுஞ் சமயம், ஸ்ரீ ராமசந்திரனும் அம்மொழியினைக் கேட்டு அதிகமான சந்தோஷங்கொண்டு கூறியதாவது :—

वनभुवि तनुमात्रत्राणमाज्ञापितं मे
सकलभुवनभारः स्थापितो वत्समूर्ध्नि ।
तदिह सुकरतायामावयोस्तर्कितायां
मयि पतति गरीयानम्ब ते पक्षपातः ॥

என்று எனதருமைத் தாயே, தங்களால், உனது சரீரத்தை மாத்திரம் காத்துக்கொள்ளென்று எந்தனுக்கு கட்டளையிடப்பட்டது. குழந்தை பரதனது சிரத்தில் ஸகல புவன பாரங்களும் சுமத்திவைக்கப்பட்டது. ஆகலின் ஆராய்ச்சி செய்யுங்கால் தங்களுடைய பூர்ணமான விசுவாஸமானது என்னிடமென்றே நிச்சமாய்த் தோன்றுகிறது. இவ்விதமிருக்க அரசனிட்ட கட்டளைப்படி நீ சென்று வருவாயென்று சொன்னால்

மன்னவன் பணியென்றாகில் நும்பணிமறுப்பனோவென்
பின்னவன் பெற்ற செல்வ மடியனேன் பெற்றதன்-
[றோ
என்னினி யுறுதியிப்பா லிப்பணி தலைமேற் கொண்
[டேன்

மின்னொளிர் கானமின்றே போகின்றேன் விடையுங்-
[கொண்டேன்.

தங்களுடைய உத்திரவாயிருப்பின் மறுத்து விடுவேனா? என தருமைத் தம்பி பெற்ற செல்வமென் தல்லவோ? இனியான் சொல்லவேண்டுவதென்னை? இக்கணமே கானஞ்செல்கிறேன். விடையும் பெற்றேன், என்று கூறினமையாலும், மேற் கூறியவாறு காகுத்தனையழைத்து கைகேயி கட்டளையிடுஞ் சமயம், அவ்விராகவன் முகவழகை மிகவழகாகவே

இப்பொழு தெம்மனோராலியம் புதற்கெளிதேயாருஞ்
செப்பருங் குணத்திராமத் திருமுகச்செவ்வி நோக்கி
லொப்பதே முன்புபின் பவ்வாசக முணரக்கேட்ட
வப்பொழு தலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா

என்று கவிக்கரசு கம்பர் கூறியவிப்பாசுரத்தானும் நன்கு விளங்கும். ஸ்ரீ ராமனது திருமுகத்திற்குவமையாக, அன்னவன் சிறிய தாய் வசனஞ் செவிபுகு முன்னங் கமலத்தைக் கூறலாம். அவ்வார்த்தையினை கேட்ட பிறகு, இவரது வதன கமலம், அப்பொழுதே மலர்ந்த செந்தாமரையினைவென்றும் மிகவும் மலர்ச்சியெய்தியதென்றும் கூறினமையாலிராமபிரான் மன நிலைமையெத்தன்மைத் தென்றும், தன் தாயிடமுள்ள பக்தியெத்தன்மைத் தென்றும் தெற்றெனவிளங்கும்.

मातृदेवो भव। முன்னொரு காலத்தில் சகோதரர் மூவரிருந்தனர். அவர்கள் தந்தைக்குப் பிற்காலம் மூலதனமான (10000) பதினாயிரம் ரூபாயைப் பாகஞ்செய்து கொள்ளுங்காலத்தில் (5000) ஐயாயிரம் ரூபாயாக விரண்டு பாகஞ்செய்து மூன்றாவது பாகமாகத் தங்கள் தாயினையும் நினைத்தார்கள். அப்பொழுது அம்மூவரில் முதல்வன், தாயினைத்தானே தனது பாகமாகச் சேர்த்துக்

கொள்ளவெண்ணி தம்பிகளிருவரையும், நோக்கி நீங்கள் பணஞ் சம்பாதிக்கத்தக்கவாற்றல் பொருந்தியவரல்லர். மற்றும், முதற்குமாரனே, உத்தரக்ரியாதிகட்குரியவனுகை யால் யானே யன்னையைப் பூஜிப்பேன், நீங்களிருவரும் பணத்தை யெடுத்துக் கொள்ளுங்கள், என்று கூறவும் சிறுவன், நமதருமைத் தாயினுக்குக் கடைக் குமாரனை வென்னிடமே மிகவும் ப்ரீதியாதலால் அவளைவிட்டு ஒரு காலுமியான் பிரியேன், என்று கூறலானன். நடுவலனோ மற்றிருவரையும் நோக்கி, உங்களிருவரினும் யானே படித் தவன், "ஈன்றபொழுதிற் பெரிதுவக்குந்தன் மகனைச் சான்றோனெனக் கேட்டதாய்," என்ற பொய்யா மொழி யர் திருமொழிப்படி என்னல் நமது மாதாவிற்குள்ளக் களிப்பு மிகவுண்டாகுமாதலின் யானே மாதாவின் பணி விடைக்குரியவன் என்றும், இம்மூவரும், தங்கள் தாயா ரை விட்டுப் பிரிய மனமிசையாதவர்களாய்ப் பிரிவாற்ரு மையை நினைந்து வருந்துவாராயினர். பிறகு இம் மூவ ரும், அன்னையுள்ளவரையில் விபக்தர்களாகுவதரியதன் றென்று, மூவரும் அநுதினம் மிகப்பக்தி புரஸ்ஸரமா யொற்றுமையாக தாயினிடத்தன்பு செலுத்தினர். மேற் கூறிய விஷயத்தில், தாயினிடத்தில் பக்தி செய்வது எவ் வளவு மேன்மை யென்பதும் பிறவும் செவ்வனே வெளி யாகுமென்பதிலையமெனச் சிறிதுமில்லை.

पितृभक्तिः अत्र स्मृतिः, द्वौ गुरू पुरुषस्येह पिता माता च धर्मतः। तयोरपि पिता श्रेयान् बीजप्राधान्यदर्शनात्। इति.

உலகத்தில் ஒரு மனுஷ்யனுக்கு குருக்கள் இருவரிருக்கி ன்றனர்கள். மாதாவும் பிதாவுமே யவர்கள் பீஜப்ரொதான் யமிருப்பதாலேயும் தனக்குப் பிறந்த மகனை நல்வழி யில் நடத்தி கல்வியினைக் கற்பித்தும் சிறந்ததான ஜீவிகை நியமனப்படுத்தியும் வைப்பதால் தாதையரே சிறந்தவர்.

அவர்கள் சரணகமலங்களிற் பணிவதும், அவர் குறிப்பறிந்து, ஏவல் தொழிற் புரிவதும் பிறவுமே நமது கடமை. இதனாற்றான் "ஏவாமக்கண் மூவாமருந்து" என்று பெரியோர் திருவாய் மலர்ந்தருளினர்.

சந்தனு மகாராஜா ஒரு காலத்தில் வேட்டை நிமித்தம் வனஞ் செல்ல, அவ்விடத்திலோர் கன்னிகையைக் கண்டு, காதல்கொண்டு திருமணஞ் செய்துகொள்ளக் கருதி யன்னவன் தந்தையிடம் வேண்ட அவனும், எனதருமை மகளிடமுதிக்கும் மகனுக்கேயுனது ஸப்தாங்க விராச்சியமுழுதினையும் முடிசூட்டுவையாகில், திருமணம் நிகழலாகும், என்றியம்பிய மொழிகளைக் கேட்டு, அரசன் தனக்குள்ளிவ்வாறு கூர்ந்தாலோசிக்கலானான். பட்டமகிஷியான கங்கையின் புதல்வன் தேவவிரதன் அரசியற்குரியவனாயிருக்கும் போழ்து, எவ்வாற்றானுமிவனது வார்த்தைக்குடன்படக்கூடவில்லையே! ஆயினும் நமதருமை மகவினிடமிதனை யிங்கிதமாயுரைப்போமெனில், உனக்கரசில்லையென்றெவ்வாறு கூறுவதென்று மனமிடந்தருகவில்லையே! இவ்விதமாயின் அப்பெண்மணியின் மேற்கொண்ட காதலை விடுவோமெனின், அக்கண்மணியு, மெனதாருயிற் காதற் கினியாதலால், என்னாருயிர் நிற்கவில்லையே யென்றிவ்வாறு பலவாறாய் நினைந்துருகுங்காலைச் சில நாட்களுள் பஞ்சபாணனும், தனது பாணங்களை முறையே விடுக்கலானான்.

வெண்பா.

நினைக்கு மரவிந்தம் நீள்பசலை மாம்பூ
அளிதடரூண் டரிக்கு மசோகு வனத்தினிடை
முல்லை கிடைகாட்டும் மாதே முழுநீலம்
கொல்லு மதனம்பின் குணம்.

என்றபடி யொவ்வொரு கணைகளும் தனது கட்டளையை நிறைவேற்ற முயர்ச்சித்தன. அத்தருணம், அரசன சரீரமிகசோர்வடைந்து நாளளவில் கிருசமாயினன். இதனையெல்லாம் கண்கண்டவருமைப் புதல்வன, (தன்றந்தையரின் மன நிலைமையெத்தன்மைத்தென்றுலோசனை செய்து) (நடந்தசெய்தியனைத்தினையு நன்றுயறிந்த சாரதியின் வாயிலாக நன்குணர்ந்து) தானேயிம்மணத்தைக் குணப்படுத்துவதெனத் தீர்மானங்கொண்டு,

கேட்டவக்கணத்திற் கடற்புரத்தரசைக் கேண்மையோடடைந்திளவரசும்; பாட்ட நீயெனக்குப் பெற்றதாய் தானும் பகீரதியல்லள் நின் மகளே நாட்டமின்றுனக்குயர்த்துரிலையந்தடாலமு மெம்பியர் ஞாலம் நீட்ட மற்றின்றே திருமண நேர்வாய்.

நீதிகூர் நிருபனுக்கென்றான் (ஆழ்வார் பாரதம்)

கடற்புரத்தரசனிடஞ் சென்று, பாட்டனும் தாங்களே பெற்ற தாயும் தமது புதல்வியே, இன்று முதல் கங்காதேவி எந்தனுக்குத் தாயல்லள். கடல் சூழ்ந்த வையகமுழுதுமெனது தம்பியே பரிபாலனஞ் செய்வதிலியாதொரு ஆக்ஷேபணையுமில்லை. எனக்குந் திருமணமே வேண்டுவதில்லையாதலின், எனது தந்தையருக்குத் தாமதமின்றி விவாஹஞ் செய்து வைப்பீர்களாக வென்று வணங்கி பிரார்த்தித்து நிற்க, அவனுஞ் சந்தோஷித்து கூறியபடியே நிறைவேற்றிச் சந்தோஷமடையச் செய்தனர். என்ற வித்திவ்விய சரித்திரத்தாலும் யயாதி மகாராஜா சுக்ராசார்யரின் திருமகளான தேவயானையை திருமணங்கொண்டான்.

T. N. இராமச்சந்திர சாஸ்திரி.

(இன்னும் வரும்.)

யோகாங்கங்களும் அவற்றின் கருத்தும்.

(முன்தொடர்ச்சி.)

பிரத்தியாஹாரம், பிரத்தியாஹாரமானது நன்றாய் அப்பியாஸம் செய்யப்பட்டால் இந்திரியங்கள் வெளிவிஷயங்களிற் செல்லும்படி தூண்டப்பட்டாலும் அவற்றிற் செல்லாமல் அவை தன்வசமாகியே நிற்கும். இக்கருத்தையே—

वश्यता परमा तेन जायते निश्चलात्मनाम् ।
इन्द्रियाणामवश्यैस्तैर्न योगी योगसाधकः ॥

என்று விஷ்ணுபுராணத்திற் கூறப்படுகின்றது. எவ்வித பாபத்திற்கும் முக்கியகாரணங்களான இந்திரியங்கள் நமக்கு வசமாய் விட்டால் பிறகு எக் காரியத்தைத்தான் சுலபமாய் சாதிக்க முடியாது.

6. தாரணை, யமநியமாதிகளால் மனது, இந்திரியம் முதலியவற்றை வெளியில் கெட்ட மார்க்கத்தில் செல்லவிடாமல் தடுத்து ஸ்வாதீனம் செய்துகொண்ட பிறகு தாரணையினால் தனக்கிஷ்டமான தேவதாமூர்த்திகளிலொன்றை ஹிருதயபுண்டரீகம் முதலிய ஸ்தானங்களில் சுலபமாய்த் தாரணை செய்து இஷ்டஸித்தியை அடையலாம். இவ்விஷயம்—

मूर्तं भगवतो रूपं सर्वोपाश्रयानिस्पृहम् ।
एषा वै धारणा ज्ञेया यच्चित्तं यत्र धार्यते ॥

என்றும் இந்த சுலோகத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

7. தியானம், தியானத்தில் ஸித்திபெறுவராயின் தாரணையால் சித்தத்தில் எந்த விடத்தில் எந்த வஸ்து தரிக்கப்பட்டிருக்கிறதோ அந்த வஸ்துவை விட்டு சித்தவிருத்தி மாறாமலிருப்பதால் விசேஷமான ஆனந்தமும், இஷ்ட தேவதையின் பிரஸாதமும் ஸித்திக்கும்.

8. ஸமாதி, இதில் ஸித்திபெறுவாரானால் ஸம்ஸார துக்கம் முற்றிலும் நீங்கி சித்தமானது எப்பொழுதும் ஈசுவரஸ்வரூபாகாரம்போல் விளங்கவே மோக்ஷமென்றும் பரமபுருஷார்த்தத்தையடைய அர்கராகின்றார்.

இவ்விதம் மேற் கூறியவைகளால் நாம் அறிந்து கொள்ளவேண்டியது யாதெனில், ஸகல துக்கங்களுக்கும் இருப்பிடமாகவும், ஜனன மரணங்கள் என்னும் பிரவாஹத்தால் நிரம்பியதாகவுமிருக்கின்ற ஸம்ஸாரமென்றும் பெருங்கடலின்நடுவே அமிழ்ந்துகிடக்கும் நம்போன்றவர்கள் இக்கடலினின்றும் கரையேறி துக்க நிவர்த்தி செய்துகொள்ள வேண்டியதவசியமாகையால், இதற்கு முக்கிய ஸாதனம் யோகமென்னும் இந்த ஒடமே. இதில் ஏறிச்செல்லுவதற்கு முற்கூறிய யமம், நியமம் முதலிய அங்கங்களாகின்ற படிகளை அவசியம் அறிந்துகொள்ள வேண்டும். அவைகளை அவரவர்கள் சக்திக்கு இயன்றவாறு சாஸ்திர முறைப்படி தெரிந்து கொள்ளவேண்டும். அவ்விதம் தெரிந்துகொள்ளப் பிரயத்தினம் செய்யும் மனிதனுக்கு இம்முயற்சி கிரமமாய் முடிவுபெறாமல் மத்தியில் இந்த ஜன்மம் முடிந்து யோகப்பிரஷ்டனாய் விட்டாலும் இந்த ஜன்மம் இருக்கின்றவரையில் விசேஷப் பெருமையையும், மனத்திற் சந்தோஷத்தையும் உடையோனாகி முடிவில் மிகப் புண்ணியவான்களான ஜனங்கள் வஸிக்கும் உலகத்தில் வெகுகாலம் வஸித்து, பிறகு மிகப் பரிசுத்தமான அரசர் குலத்தில் பிறந்து பற்பல யோகங்களை அனு

பவிக்கிறான். அவனே போகங்களில் விருப்பமில்லாமல் உறுதியான வைராக்கியத்தையடைந்திருந்தால் அதிக ஞானவான்களான யோகிகளின் குலத்திற் பிறந்துமுன் அனுஷ்டித்து வந்தபடியே யோகானுஷ்டானம் செய்து சீக்கிரத்திற் சித்தி பெறுகின்றான். யோக மார்க்கத்தில் முயற்சி கொள்ளும் ஓர் மனிதனுக்கு அம் முயற்சி நிறைவேறாமல் மத்தியில் அந்த ஜன்மம் முடிவடைந்துவிட்டாலும் குற்றமில்லை. மனிதருக்கு இவ்விதமான ஓர் ஜன்மம் கிடைப்பதுகூட மிகவரிதே. இவ்விதமே ஸ்ரீ பகவத் கீதை 6வது அத்தியாயத்தில் ஸ்ரீ பகவானுக்கும் அர்ச்சுனனுக்கும் நிகழ்ந்த ஸம்வாதத்தில் நன்கு வெளிப்படுகின்றது. அர்ச்சுனன் இவ்விஷயத்திற் சங்கைகொண்டு—

कच्चिन्नोभयविभ्रष्टश्छिन्नाभ्रमिव नश्यति ।
अप्रतिष्ठो महाबाहो विमूढो ब्रह्मणः पथि ॥
एतन्मे संशयं कृष्ण छेत्तुमर्हस्यशेषतः ।
त्वदन्यः संशयस्यास्य च्छेत्ता न ह्युपपद्यते ।

என்கிற வசனங்களால் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவை வினவும் போது ஸ்ரீ பகவான்—

पार्थ नैवेह नामुत्र विनाशस्तस्य विद्यते ।
न हि कल्याणकृत्कश्चिद्दुर्गतिं तात गच्छति ॥
प्राप्य पुण्यकृतांल्लोकानुषित्वा शाश्वतीः समाः ।
शुचीनां श्रीमतां गेहे योगभ्रष्टोऽभिजायते ॥
अथ वा योगिनामेव कुले भवति धीमतां ।
एतद्धि दुर्लभतरं लोके जन्म यदीदृशम् ॥ என்று

யோகப்பிரஷ்டனுடைய மகிமையைப்பற்றி விசேஷமாய்ப் புகழ்ந்து சொல்லியிருக்கின்றார். ஆகையால் யோகமார்க்கத்திற் செல்கின்றவர்கட்கு இடையில் இடையூறுகள் நேர்ந்தாலும் அதுவும் சிரேயஸ்ஸின் பொருட்டே ஆகின்

றதென்று ஸ்ரீ பகவானே நேரிற்கூறியிருப்பதால் இவ்விஷயத்தில் எவ்வளவும் சந்தேகம் கொள்ளாமல் அவரவர்கள் சக்தியனுஸாரமாய் அனுஷ்டித்து கிருதார்த்தர்களாக வேண்டுமாய்க் கோருகிறோம்.

பிராமணப் பெண்களின் விவாஹத்தைப்பற்றி யுக்திவாதிக்கும், பண்டிதருக்கும் ஸம்பாஷணை.

(முன்தொடர்ச்சி.)

பெண்களின் விவாஹமும் இஷ்டம்போல் செய்யலாமென்றிருந்தால் இந்தச் சங்கடங்கள் நேரிடாமலிருக்குமல்லவா?

ப.—வாஸ்தவம். இக்காலத்தில் பிள்ளையாயிருந்தால் போதும். கணக்கு தெரிந்தவரையில் பணம் கேட்கிறான். இதுவும் ஓர் வியாபாரமுறையாயிற்று. அதற்காக பிள்ளைகளைக்கூட விலை கூறி பணம் தேடத் துணியும் அற்பபுத்தித் தன்மையையன்றோ தூரவிலக்கவேண்டும். எக்காலத்திலாகிலும் இது பிராமணர்களிடமுண்டா? அல்லது இது தர்மமா. முதலில்யாவரும் ஒன்றுசேர்ந்து இந்த துராசாரத்தை விலக்கப் பாடுபடுங்கள் பார்ப்போம். அதன்றி, பேனுக்கு பயந்துமுடியை எடுப்பதுபோல இதற்கு பயந்து பிராமண்யத்தையே இழக்கத்தக்க பெருங்குற்றமான ருதுவானபின் விவாஹத்தைச் செய்யத் துணியலாமா? அது கூடாது.

யு—ஆனால் ருதுவுக்கு முந்தியேதான் விவாஹம் செய்ய வேண்டுமென்று நிச்சயமோ ?

ப—ஆம், அப்படியேதான் சாஸ்திரம், சந்தேகமில்லை.

யு—இப்படி சாஸ்திரம் சாஸ்திரமென்று சொல்லி அனியாயமாய் சிறுவயதிலேயே பெண்களுக்குவைதவ்வியத்தை விளையவைக்கிறீர்களே? வேண்டாமய்யா. ருதுவானபிறகு விவாஹத்தைச்செய்து வைதவ்ய துக்கத்தை விலக்க வழிபாரும்.

ப—ஓகோ! ருதுவானபிறகு செய்யும் விவாஹத்திற்கு எமனும் பயப்படுவானோ! அல்லது அதுவரனுடைய ஆயுளை வளரச்செய்யும் கர்மமோ. இதென்ன யோக திருஷ்டியில் கண்டுபிடித்த விஷயமோ! மரிப்பது உமது யுக்திக்குள்ளடங்கியதா? வைதவ்யத்தை விலக்க இதுவா வழி. பர்த்தாவென்ற நியமத்தையே விலக்கினால் வைதவ்யப் பெயரையே அடையாமலிருக்கலாம். இப்படி தாறுமாறான யுக்திகளைக் கொண்டு ஸநாதனமான வைதீக தர்மங்களுக்கு இடையூறு செய்வதால்தான் இக்காலத்தில் அவ்வித துக்கங்களும் அதிகப்படுகிறதுகள்.

யு—ஆகிலும் சிறு வயதில் இந்த துக்கம் நேர்ந்தால் மிகக் கடினம். அதை நினைத்தால் மனது பயந்து தர்ம வழியிலிருந்தும் விலக்கமடைகிறது.

ப—ஐயா, வைதவ்யமென்பதுதானா பெரும் கஷ்டம். பர்த்தாவுடன் கூடியிருப்பதிலும் விலக்கத்தகாத கொடிய நோய், ஏழைத்தனம், மக்களின் மரணம் முதலிய பற்பல பெரும் துன்பங்களெவ்வளவு இருக்கின்றன ? அதற்கு பயந்து கிரகஸ்தாசிரமமே வேண்டாமென்று நினைப்பவனுண்டோ. ஆடு மாடு

முதலானதுகளுக்கும் பொதுவான அற்ப போகத்தை பயனுகக்கருதியா விவாஹம் விதிக்கப்படுகிறது? விவாஹமென்பது குலத்திலுள்ள 21 பரம்பரையை பிரம்மலோகத்திற்கு ஏற்றிவைக்கத்தக்க மிக உத்தமமான தர்மமென்றல்லவோ பெரியோர்கள் உபதேசிக்கிறார்கள்.

ज्योतिष्टोमातिरात्राणां शतं शतगुणं कृतम् ।
प्राप्नोति कन्यकां दत्त्वा होममन्त्रैश्च संस्कृताम् ॥

ஒரு சமயம் துக்கம் நேர்ந்துவிட்டால் என்ன செய்வோமென்று இவ்விதமழுதுகொண்டு தர்ம வழியை விட்டு பயந்து ஓடுவோமாகில் அத்துன்பம் நேராமலிருக்குமென்ற உறுதியாவதுண்டோ? எக்காலத்திலும் தர்மத்தையே பெரிதாகக்கொண்ட இந்துக்களுக்கு அதிலும் பிராமணர்களுக்கு என்ன மகிமை. அந்தோ! நம்முன்னோர்களுக்கிருந்த அறிவும் விவேகமும், தைரியமும், தர்மத்திலுறுதியும் அற்பமாவது நம்மவர்களிடமிருக்குமாகில் பெரிய தர்மமான பெண்களின் விவாகத்தை இவ்வளவு ஆபாஸமாகச் செய்ய ஆலோசிக்கக் கருதுவோமா?

யு—உமது சாஸ்திரோபதேசங்களெல்லாம் தூர இருக்கட்டும். ருதுவானபின் விவாஹம் செய்கிறதுதான் பயனுள்ளதென்றும், யுக்தமென்றும் என் புத்திக்குத் தோன்றுகிறது. நான் அதற்கு முயற்சிக்கப் போகிறேன்.

ப—வேண்டாம். அநியாயமாய்த் தர்மத்தைத் துலைத்து ஜனங்களையும் பெரும் பாதகத்திற்கு மட்டில் உள்ளாக்கச் செய்வீரேயல்லாமல் பின்னிட்டு நேரத்தக்க கதிகளுக்கு சிறிதும் நீர்ஜாமீனாயிருக்க முடியாது நிச்

சயம். மரணம் நெருங்கினால் நீர் எங்கேயோ மைற்றவர்கள் எங்கேயோ. என்ன பிரவியோ. கர்மங்களுக்கு பயனளிக்குமீசுவரன் வேறொருவரிருக்கிறார். இந்தப் பிடிவாதம் வேண்டாம்.

तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्याकार्यव्यवस्थितौ ।
स्वधर्ममपि चावेक्ष्य न विकम्पितुमर्हसि ।

இவ்விஷயத்தில் இன்னுமுமக்கு எவ்வித சங்கைகளிருந்தாலும் அவைகளை நன்றாய் விலக்கத் தக்கதும் கும்பகோணம் ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரியஸ்வாமிகளவர்கள் மடம் ஆஸ்தான பண்டிதரும் மகாமகோபாத்தியாயருமான ப. கணபதிசாஸ்திரிகளவர்களால் வட மொழியில் எழுதப் பட்டதுமான வயோ நிர்ணயம் என்ற புஸ்தகத்தை வாங்கி நன்றாய் படித்துப்பாரும்.

நித்திரையின் அனுபவம் என்ன?

தூங்கும் காலத்தில் நமது சரீரத்திலுள்ள சகல ஸ்தூல சூக்ஷ்ம கருவிகளும் ஒய்வடைந்து நிற்கின்றன. நமது மனது புத்தி இவைகள் மூளையில் தங்கி வேலை செய்வதை விட்டு தன் இருப்பிடமாகிய ஹிருதயத்திற்குச் சென்று விடுகிறது. அக்காலத்தில் கேவலம் அறியாமையே பிரபலமாக வீசிப் பிரகாசிக்கிறது. ஆனால் இத்தீர்மானம் ஸ்தூலமான தீர்மானம். எப்படியெனில் இவ்வறியாமையை சாட்சியாகப் பார்த்துக்

கொண்டும் சூக்ஷ்மமவாயிலராக அனுபவித்துக் கொண்டுமிருக்கிற சுயம் பிரகாச ஞானத்தின் சுகநிலையை ஸ்மிருதியால் ஒவ்வொரு ஜீவனும் அறிகிறான். 'ஸ்மிருதி' என்றால் அனுபவித்த வஸ்துவின் ஞாபகம். உதாரணமாக கற்கண்டின் தித்திப்புத் தன்மை அக்கற்கண்டை புசித்த பின் அன்றே நன்கு விளங்கும். அது போல் தூக்க காலத்தில் உண்டாகும் அனுபவத்தின் ஸ்மிருதி விழித்தவுடன் பேசும் வார்த்தையால் அறியலாம். கோரமான நித்திரையின்றும் விழித்தவனுக்கு நான் சுகமாய் உறங்கினேன், ஒன்றும் அறியாதிருந்தேன், என்றிவ்வாறான ஸ்மிருதி அல்லது ஞாபகம் உண்டாகின்றதல்லவா? ஆகவே தூக்க காலத்தில் சுகம் அஞ்ஞானம் ஆகிய இவ்விரண்டுவித அனுபவம் உண்டென்று கண்டுகொள்ள வேண்டும்.

2. இப்படியில்லையென்று மறுப்பவர்கள் சிலர் உண்டு. ஆனால் இவர்கள் சுகம் அஞ்ஞானம் இவ்விரண்டில் ஏதாகிலும் ஒன்றையாவது ஒப்புக்கொண்டே ஆகவேணும். நித்திரை காலத்தில் ஒன்றுமேயில்லையென்று வாதிப்பது முற்றிலும் பிசகு. ஒன்றுமேயில்லையென்கிற தீர்மானம் உண்மையாகுமாகில் தூக்க காலத்தில் அமர்ந்திருக்கிற ஒவ்வொரு பிராணியையும் ப்ரேதமாக நினைத்து மயானத்திற்கு தூக்கிப்போக ஏர்ப்படும். ஆனால் அவ்விதம் உலகில் நடப்பதில்லை. ஆகவே சுகம் அஞ்ஞானம் இரண்டில் ஒன்றை ஒப்புக்கொள்ளவேண்டியது அவசியமாகிறது. நித்திரையில் அஞ்ஞானம் ஒன்றேயுளதெனில் விழித்தவுடன் சுகமாயிருந்தேன் என்பது சித்திக்காது. ஆகையால் சுகம் உண்டென்றாகிறது. சுகம் ஒன்றையே ஒப்புக்கொண்டு அஞ்ஞானம் இல்லையென்று மறுப்பதற்கும் இடமில்லை. இவ்விதம் மறுத்துப் பேசக்கூடிய புரு

ஷன் சொரூப சுகத்தில் அநுபவமாய் விழுந்து சதா சமா தியிலேயே நிற்றல் வேண்டும். இவ்விதம் சமாதியிலேயே நிற்கக்கூடிய பெரியோர்களே சுகம் ஒன்றே எப்பொழுதும் எக்காலத்திலும் உள்ள வஸ்துவென்று துணிந்து பேசவல்லமையுடையவர்கள். இவ்வித சமாதிநிலையையே சகல ஜீவர்களும் நாடவேண்டும். ஆனால் உலகில் கோடிக் கணக்காயுள்ளவர்களின் அநுபவம் எப்படியெனில் நித்திரைக்குப் போனவுடன் சமாதியிலேயேயிருந்துவிடுகிறதில்லை. அவரவர்கள் விழித்தவுடன் தத்தமக்குரிய தொழில் வியவகாரத்திற் புகுகிறார்கள். தூக்ககாலத்தில் 'சுகம்' என்கிற ஒரே பொருள்தான் உளதென்று சாமான்ய புத்தியையுடையவர்கள் வாதிப்பார்களாகில் அவர்களை அவ்விதம் சுகநிலையைவிட்டு ஏன்? வியவகார விருத்தியில் புகுந்து விஷய இன்ப துன்பங்களுக்காளாக வேண்டுமென்று கேட்க இடம் உண்டாகிறது. இதற்கும் ஏதாகிலும் யுக்திவாதம் சொல்லலாம். அதாவது ஈஸ்வரனால் இவ்வித விசித்திரமாக சிருஷ்டி செய்யப்பட்டிருக்கிற இவ்வுலகத்திலுள்ள பிராணிகோடிகளின் சுபாவங்களை அறிந்து சுகம், ஆரோக்கியம், திடம் ஆகிய நன்மைகளை அடைய வேண்டியதற்காக கடவுள் வாழ் நாளை நமக்குக் கொடுத்திருக்கிறார் என்பார்கள். உலக வியவகாரம் செய்யாமல் மேற்சொல்லிய நன்மைகளை அடைவது அசாத்தியம் என்று பேசுவார்கள். இதென்ன ஆச்சரியமான பேச்சு! சொரூப சுகத்தைக் கண்ட பிறகு அதினின்றும் நழுவாமலிருப்பதற்கான வழியல்லவோ தேடவேண்டும். இதைவிட்டு விளையாட்டுப் பிள்ளைகள் போல் இதில் சுகம் உண்டு அதில் சுகம் உண்டென்று பல வாறாக அபிப்பிராயப்பட்டு தாறுமாறாக எண்ணி அலைவதால் பயனில்லை. நல்ல தங்கத்தின் குணத்தை அறிந்த புருஷன் கேவலம் போலித் தங்கத்தைக் கண்டு பிரமித்து

பலவித ஆபரணதிகளைச் செய்து அணிந்து கொண்டால் மேன்மையாகவிருக்குமென்றெண்ணுவது பேதமையல்லவா? அதுபோல் சொரூப சுகம் நித்திரை காலத்தில் நிற்கிறதை அறியாமல் பலவிஷயங்களினின்றும் உண்டாகக்கூடிய சுகத்தைப் புசிக்கலாமென்று எண்ணி மோசம் போகலாமா? சொரூப சுகத்திற்கு வேறாக காணப்படும் இதர சுகம் அனைத்தும் நிரந்தர சுகம் அன்று. கானலில் தோன்றும் நீர்போல் பிராந்தியேயல்லாமல் வேறல்ல. ஆனால் சொரூப சுகத்திற்கு அஞ்ஞானம் விரோதியன்று. ஆனதால் சொரூப சுகத்தோடுகூடவே அஞ்ஞானமும் நித்திரா காலத்தில் பிரகாசிக்கிறது. எதுபோலெனில் விறகுகட்டையிலிருக்கும் சாமான்ய நெருப்பு இருட்டின் இருப்பிற்கு விரோதியாகாமல் அத்துடன் கூடவே இரண்டு வஸ்துவும் பிரகாசிப்பதை காண்கிறோமல்லவா? அதுபோல் ஜீவர்களின் நித்திரை காலத்தில் சுகம் அஞ்ஞானம் இவ்விரண்டும் உண்டு.

வைத்தியநாதன்.

வர்ணவிவேகம்.

(முன்தொடர்ச்சி.)

श्रीमद्रामायणम् 55-வது ஸர்க்கம்.

तस्या हुंभारवाज्जाताः कांभोजाः रविसंनिभाः ।
ऊधसस्त्वथ संजाताः पल्लवाः शस्त्रपाणयः ॥

योनिदेशाच्च यवनाः शकृद्देशाच्छकास्तथा ।
रोमकूपेषु च म्लेच्छा हारीताः सकिरातकाः ॥

என்று வஸிஷ்டாச்சிரமத்தில், க்ஷத்திரியாவஸ்தையுள்ள காலத்தில், விசுவாமித்திரர் வஸிஷ்டருக்குக் காமதேனுவால் மிகுந்த கௌரவம் ஏற்பட்டிருப்பதைக் கண்டு, அவ

ரிடம் அப்பசுவைத் தாம் கேட்டுக் கொடாததால் சினங் கொண்டு பலாத்காரஞ் செய்தபோது நேர்ந்த போரில் அக்காமதேனுவால் சிலர் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றனர்.

அக்காமதேனுவின் ஹும்பாத்வனியிலிருந்து, சூரியர்களுக்கொப்பான காம்போஜர்களும், மடியிலிருந்து, சஸ்திரபாணிகளான பப்லவர்களும், யோநிதேசத்திலிருந்து யவநர்களும், சகிருத்ப்ரதேசத்திலிருந்து சகர்களும், மயிர்க்கால்களிருந்து கிராதகர்கள், ம்லேச்சர்கள், ஹாரீதர்கள் என்பவர்களும் உண்டானார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வாறு இதிகாஸங்களிலும், மற்றுமுள்ள புராணங்களிலும் விரிவாக ஜாதிபேதங்கள் நன்கு கூறப்பட்டிருக்கின்றன. ஆகையால் இந்த ஜாதிபேதத்தைச் சுருக்கி, பிரகிருதத்தில் வர்ணவிவேகம் என்ற இவ்வியாஸத்தால் வர்ணங்களை அநுலோம ஜாதியர்கள், பிரதிலோம ஜாதியர்கள் ஸங்கீர்ணஸங்கரஜாதியர்கள் என்று வகுத்து விரித்த போதிலும், இனி எழுதக் கருதப்படுகின்ற வர்ணதர்மம் முதலிய வியாஸங்களுக்கிணங்கவும், வர்ணங்களைப்பற்றிய சில ஆக்ஷேபணங்களின் ஸமாதானத்திற்காகவும் வர்ணங்களைப்பற்றிச் சிறிது கூறத்தொடங்குகிறேன்.

வர்ணங்களுடைய வியவஸ்தை இக்கலியில் கெட்டிருக்கின்றபடியால் த்விஜாதிகள் யாகம் முதலான சில கர்மாக்களைச் செய்யலாகாது என்று சிலர் கருதுகின்றனர். அது பொருந்தாது.

यावद्वर्णविभागोऽस्ति यावद्वेदः प्रवर्तते ।
तावन्न्यासोऽग्निहोत्रं च कर्तव्यं तु कलौ युगे ॥

என்று பல ஸ்மிருதிகளிலும், புராணங்களிலும் ஸமாநாநுபூர்வமாகக் காணப்படும் வசனத்தை நிர்மலமான எண்

ணத்துடன் ஆராய்ந்து பார்த்தால் அவ்வாக்ஷேபணையேற் பட நியாயமிராது.

ஏவ்வளவு காலம் வர்ணங்களின் பிரிவினையுளதோ, எவ்வளவு காலம் வேதம் வழங்கிவருகின்றதோ அவ்வளவு காலம் வரையில் ஸந்நியாஸமும் அக்னிஹோத்திரமும் கலியில் செய்யத்தக்கது என்ற பொருள் வாய்ந்த அவ் வசனப்படி, தற்காலம் வர்ணங்களின் பிரிவினையும், வேதா. த்தியயனமும் நடை பெற்று வருவதால், அக்கினிஹோத் திராதிகள் செய்யலாமென்றே ஏற்படுகின்றது. இக்கலி தொடங்கி ஸ்வல்பகாலமேயாகிறது. வர்ணவியவஸ்தை கெடுவது கலியின் கடைமுறையான பாகத்திலேயேதான் ஏற்படும் என்று பாரதம் வநபர்வாவில்

> अल्पावशिष्टे तु कलौ युगान्ते भरतर्षभ ।
> सहस्रान्ते नराः सर्वे प्रायशोऽनृतवादिनः ॥

என்றவிடத்தில் நீலகண்டீய வியாக்கியானத்தால் सहस्रान्ते என்றவிடத்தில் கலியின் பூர்ண காலத்தை நான்காகப் பங் கிட்டு அதன் நான்காவது பாகத்தில் எல்லா மனிதர்களும், வெகுவாய் அஸத்தியமே செப்புவார்கள் என்று தொடங் கி, முடிவில்

> एकवर्णस्तदा लोके भविष्यति युगक्षये ।

என்று அந்த யுகத்தின் முடிவிலேதான் வர்ணவியவஸ்தை சீர்குலைந்து ஓரே வர்ணமாகப் போகிறது என்றுந் தெரிய வருகிறது.

ஆகையால் தற்காலத்தில் வர்ணவியவஸ்தை முற்றி லும் குன்றுமலிருப்பதோடு ஆங்காங்கு வேதங்களும் வழ ங்கி வருகின்றதால் அவரவர்கட்கு விதித்தவாறு கர்மாக் களைச் செய்வதற்குச் சாஸ்திரங்கள் அவகாசந்தருகின் றன.

वर्णभागः என்று இயம்பாமல் वर्णविभागः என்று वि என்ற (उपसर्ग)த்தின் கருத்தை யாராய்ந்தால் ஒன்றோடொன்று கலக்காத ஸ்வஸ்வதர்மவியவஸ்தையுள்ளபரியந்தமும் அவ்வாறே वेदो वर्तते என்று கூறுமல் वेदः प्रवर्तते என்று प्र என்று उपसर्ग த்தின் உட்கருத்தை யாராய்ந்தால் கலியில் எவ்வளவு காலம்வரையில் கல்பசூத்திராதிகளோடுகூடின சிரௌதாதிகர்மாக்களுக்கேற்றவேதங்கள் வழங்கிவருகின்றனவோ அவ்வளவு காலம் வர்ணவிபாகங்களுக்கேற்ற ஸகல கர்மாக்களும் நடைபெறலாம் என்ற விஷயத்தில் எந்த ஆக்ஷேபணைகளும் முன் நில்லா.

ஆனால், नन्दान्तं क्षत्रियकुलम् என்று செவியில் படும் ஓர் சொல்லால் நந்தனுக்குப் பிறகு க்ஷத்திரியர் குலம் கிடையாது என்று கொள்ளல் கூடாது. நந்தனுக்குப் பிறகு அவனுக்கு காரணமான குலம் அவனோடே முடிவு பெற்றதென்றோ, அல்லது நந்தன் காலம்வரையில்தான் க்ஷத்திரிய தர்மங்கள் புஷ்களங்களாக நடைபெற்றனவென்றோ? அச்சொல்லின் பொருளாகும்.

एकवर्णस्तदा लोके भविष्यति युगक्षये ।

என்ற வநபர்வாவின் வசனத்தால் கலியின் முடிவில் வெகுவாய் வர்ணஸாங்கரியம் உண்டாகும் என்ற கருத்துள்ளதேயொழிய, வர்ணங்கள் முழுவதிலும் கெட்டுப்போகின்றன என்று கருத்தன்று. அப்படியாயின் பாகவதம் 12-வது ஸ்கந்தம்

शम्बलग्राममुख्यस्य ब्राह्मणस्य महात्मनः ।
भवने विष्णुयशसः कल्की प्रादुर्भविष्यति ॥

என்று யுகாவஸாநத்தில் பிராம்மண குலத்தில் பகவானுடைய அவதாரம் ஏற்படும் என்ற வசனம் விரோதிக்கும்.

இவ்வாறிருக்க சிலர் கலியின் முடிவில் இரண்டு வர்ணங்கள்தாம் உண்டு என்று வநபர்வாவிலேயே அஸ்பஷ்

டங்களான சில வசனங்களையே பிரமாணங்களாகச் சொல்லத் தலைப்படுகின்றனர். அது தக்கதன்று, ஏனெனில் அதே பர்வாவின் முடிவில் முன்பின் நோக்குமிடத்து ஸ்பஷ்ட வசனங்கள் பல புலப்படுகின்றன.

ब्राह्मणाः सर्वभक्षाश्च भविष्यन्ति कलौ युगे ।
क्षत्रियाश्चापि वैश्याश्च विकर्मस्था नराधिप ॥
स्वल्पायुषः स्वल्पबलाः स्वल्पवीर्यपराक्रमाः ।
भोवादिनस्तथा शूद्रा ब्राह्मणाश्चार्यवादिनः ।
न तदा ब्राह्मणः कश्चित्स्वधर्ममुपजीवति ।

என்றும் அவ்விடத்திலேயே மற்றொரு ஸ்தலத்தில்

राजानो ब्राह्मणा वैश्याः शूद्राश्चैव युधिष्ठिर ।
व्याजैर्धर्मं चरिष्यन्ति धर्मवैतंसिका नराः ॥

என்று பிராம்மணர்கள் விதிநிஷேதங்களின் வரம்புகடந்து எல்லாவற்றையும் புசிப்பார்கள். க்ஷத்திரியர்களும் வைசியர்களும் தமதல்லாத கர்மாக்களைச் செய்யத் துணிவார்கள். ஆயுஸ், பலம், வீரியம், பராக்கிரமம் ஆகிய இவைகள் அவர்கட்குக் குன்றிவிடும். சூத்திரர்கள் மேன்குலத்தாரை ஓய் என்று மரியாதை கடந்துக் கூப்பிடுவார்கள். பிராம்மணர்கள் கீழோரை ஆரியரே என்று கூப்பிட்டுப் பேசத்தொடங்குவார்கள். நான்கு வர்ணத்தாரும் கபடங்கொண்டவர்களாய் உட்கருத்தில்லாமலே வெளிவேஷமே முன்னிட்டு வியாஜங்களாலேயே தர்மத்தைச் செய்வார்கள் என்றும், அவைகளின் பொருளாகிறது. இந்த வசனங்களில் பிராம்மணஜாதிகளான வசனங்கள் ஸ்பஷ்டங்களாயிருப்பதால், நான்கு வர்ணங்களின் வியவஸ்தை சற்று மாறுவதுபோல் தோன்றினாலும் எத்தனையோ காலம் நடைபெறும் என்பதில் ஐயமேயில்லை.

அரிது அரிது மானிடராதலரிது என்றபடி துர்லபமான மானிட ஜந்மம்பெற்று, அதிலும் புருடனாய் ஜநித்து பிராம்மணனாக ஆனதற்கு முக்கிய பயனையறிந்துகொள்

ளல் வேண்டும். அறிந்து அதன்படி நடத்தலும் வேண்டும். அதாவது வைதிகங்களான, தர்மங்களைச் சாஸ்திரங்கள் போதிக்கிற வண்ணம் சிரத்தை, பக்தி இவைகளுடன் அநுஷ்டிக்கவேண்டும்.

जन्तूनां नरजन्म दुर्लभमतः पुंस्त्वं ततो विप्रता तस्माद्वैदिकधर्ममार्गपरता என்று பகவத்பாதர்களும் கூறியுள்ளார். அவ்வாறு தர்மங்களை யவலம்பிக்காமல் காலத்துக்கும், சரீரசுகத்திற்கும் தக்கவாறுன குட்டிவேதாந்தங்களைமட்டிலும் பிதற்றுவதால் பேரானந்தம் ஸாத்யமாகாது. உப்பரிகையில் ஏறுகின்றவன் ஒவ்வொரு படிக்கட்டாகவேதான் கடந்து மேல் ஏறி சுகிக்கமுடியும். அவ்வாறே தர்மாநுஷ்டானம் என்ற கீழ்ப்படிக்கட்டை நாடியே பரமாத்மலாபம் என்ற உப்பரிகை ப்ராப்தமாய் ஆநந்திக்க ஸாத்யமாகும். கீழ்ப்படியிலிருந்தே ஒரே தாவலாய் உப்பரிகைக்குத் தாவுகின்றவன் எங்ஙனம் ஆபத்திற்கேயுள்ளாகிறுனே அங்ஙனமே தர்மத்தை யுதாஸீனஞ்செய்து கல்விவேதாந்தங்கள் சொல்லும் சோம்பேறித்தனமுள்ளவன் பரமாநர்த்தங்களுக்கே பாத்திரமாவான்

(இன்னும் வரும்.)

K. V. சுப்பிரமணிய சாஸ்திரி.

ஸ்ரீ ராம விஜயம்.

அயோத்தியாகாண்டம்.

அத்யாயம்—க

ஸ்ரீலக்ஷ்மீநாதனே ராமனுய் அவதரித்தவராதலால் அந்த ஸ்ரீராமன் சீதாதேவியுடன் கூட திவ்ய போகங்களை அடைந்து விளங்கிவரும் அயோத்தியா நகரம் முன்னிலும்

அதிகமான செழிப்புடனும் சிறப்புடனும் பிரகாசித்தது. ஸ்ரீ ராமனது கல்யாண குணங்கள் உலகனைத்தையும் வசப்படுத்தி விட்டன. சக்ரவர்த்தியான தசரதமகாராஜன் ராகவனுடைய குணங்களையும் சாமார்த்தியத்தையும் அறிந்து ஜனங்களின் க்ஷேமத்தைக் கருதி ராஜ்யபாரத்தை அவரிடம் ஒப்புவிக்க எண்ணினர். இதன் நிமித்தம் நானு தேசத்து ராஜாக்களுக்கு ஓலையனுப்பித் தருவித்து ஒரு சபை கூட்டினர். ஜனக மகாராஜனுக்கும் கேகய மகாராஜனுக்கும் மாத்திரம் தூதனுப்பவில்லை. பிந்திச் சொல்லலாமென்றிருந்துவிட்டார். மிதிலா நகரத்திலிருந்தபடியே மாமனுலழைத்துப்போகப்பட்ட பரதசத்ருக்னர்கள் இந்த சமயத்தில் கேகய ராஜ்யத்தில் இருந்தார்கள். வஸிஷ்டர் முதலான மகர்ஷிகளும், மன்னர்களும், மகாஜனங்களும் சமுத்திரம்போல் நிறைந்திருந்த சபையை அடைந்து சிம்மாசனத்திலேறித் தேவர்களால் சூழப்பட்ட மஹேந்திரன்போல் சக்ரவர்த்தி விளங்கினர். கம்பீரமான குரலுடன் ஆனந்தத்தினுல் மலர்ந்த கண்களுடன் சக்ரவர்த்தி சபையைப் பார்த்து "புண்ய புருஷர்களே! வணக்கமாய் ஒருவேண்டுகோள் செய்துகொள்கின்றேன். தயைபுரிந்து கேட்டருளவேண்டும். என் முன்னோர்கள் செய்து வந்ததுபோல் பிரஜைகளை வயிற்றில் பிறந்த குழந்தைகளுக்கு மேலாகப் பாவித்து வெகு கவலையுடன் அநேகம் ஆயிரம் வருஷங்கள் ஆண்டு களைப்புற்றேன். வெண்மையான குடையின்கீழ் இடைவிடாது இருந்து ஆண்டதில் அக்குடையின் வெண்மை பாய்ந்ததென்னும்படி தேகமெல்லாம் விருத்தாப்பியத்தினுல் வெளுத்துப் போச்சுது. பாரமான வண்டியை வெகுதூரமிழுத்துவந்த குதிரைபோலும் சக்தியற்றவனுனேன். மூன்று லோகங்களையும் பரிபாலிக்க வல்லவனும் மங்களரூபனுமான என் மண்மணி

ராமனுக்குப் புஷ்ப நக்ஷத்திரமுடன் கூடிய நாளைய தினத்தில் யுவராஜ பட்டாபிஷேகம் செய்வதாய் நினைக்கின்றேன். இதனால் எனக்குச் சுமை குறைவதுமன்றி உங்களுக்கும் நிரம்பப் பிரீதியுண்டாகுமென்று விசுவஸிக்கின்றேன். என்று சொன்னதுதான் தாமதம். வர்ஷாகாலத்தில் நெருக்கமாய் நீருடைய பெரும் மேகங்கள் உலகமெல்லாம் சலீர் என்று குளிர எப்படி வர்ஷிக்குமோ அவ்விதமே சகல ஜனங்களும் சந்தோஷ வெள்ளத்தைப் பெருகவிட்டுக்கொண்டு ஆரவாரித்தனர். அடங்காத ஆனந்தத்துடன் ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகமென்று சொல்லிக் கொந்தளித்து பண்டிதபாமரர்களனைவரும் ஒரு மித்துக் கூத்தாடியதில் அவ்விடமெல்லாம் ஆட்டங்கொண்டது. எல்லோரும் ஒரே பிரார்த்தனையாய் "அனேகமாயிரம் வருஷங்களுக்குமேல் அதிகப்பட்டுத் தொண்டு கிழமாயும் ராஜ்யத்தை வகிக்கின்றீர்கள். விசாலமான புஜங்களும் அமோகமான பலமும் உடைய எங்கள் தனிவீரன் ராமன் வெண்குடையில் மறைந்தும் மறையாமலும் தோன்றும் முகச்சந்திரனது நிலவை வீசிப் பட்டத்து யானைமீது பவனிவரும் பெருமையை இன்றைக்கே இப்பொழுதே எங்கள் கண்கள் களிகொள்ளப் பார்க்கவேண்டும். உடனே அபிஷேகம் நடக்கட்டும். இதுவே எங்கள் நீடித்த ஆசை. தாமதத்தை சிறிதும் சகியோம் என்றனர். மகாராஜாவும் இவர்களுடைய குதூகலத்தை இன்னமும் தெரிந்து கொள்ள வேண்டுமென்று எண்ணம் கொண்டவராய் "என்ன இவ்வளவு அவசரம்! உங்கள் பரபரப்பு எனக்குச் சந்தேகத்தைத் தருகின்றது. நான் ஒரு குறைவுமில்லாமல் உங்களெல்லோரையும் நீதியுடன் பரிபாலிக்கவில்லையா? என்னுள்கையில் என்ன மாசு மருவைக் கண்டுவிட்டீர்கள்? ராகவன் சிறிது காலம் கிரமித்துப் பட்டத்து

க்கு வந்தால் என்ன மோசம் வந்துவிடப் போகிறது? என்றும், ஜனங்கள் "மகாராஜ, எங்கள் மீது கோபிக்கச் சிறிதும் காரணமில்லை. தங்கள் செல்வக் குமாரனது திவ்ய கல்யாண குணங்கள் எங்களை விலைப்படுத்தி விட்டன. தங்களுக்குத் தங்கள் தநயனுடைய அருமை தெரியுமே தவிரப் பெருமை தெரியாது. ஆனந்த மழையைப் பொழிந்து எங்களை யாட்கொள்ளும் இம்மகா புருஷனது பெருமையை நாங்கள் அறிந்தபடி சொல்கின்றோம். கேட்கலாம். ராகவன் தங்களுக்கு மேலானவர் என்பது மாத்திரம் இல்லை. உங்கள் முன்னோர்கள் எல்லோரையும் சேர்த்துப் பார்த்தாலும் எங்கள் ராமனுக்கு ஈடாகார்கள். இந்திரனும் இவருக்கு குறைவானவன். இந்துவும் இவரது குளிர்ச்சி அடைந்தான் இல்லை பூமிதேவிக்கிவர்பொறுமையில்லை. பிரஹஸ்பதிக்குமிவர் அறிவில்லை. தர்மமும், சத்யமும், சீலமும், தயையும், வித்தையும், கீர்த்தியும், சக்தியும், புத்தியும், குணமும், மணமும், சாந்தமும், வேதாந்தமும் இவரிடமே சம்பூர்ணமாய்க் குடிகொண்டிருக்கின்றன. பிரியமாயும் மிதமாயும் இதமாயும் இனிமையில் ஊர்ந்தும் இவர் முகத்தினின்றும் வரும் ஒவ்வொரு வார்த்தைக்கும் கோடி கோடியாய்க் கொடுக்கலாம். எத்தனை தடவை அரண்மனையினின்று வெளிவந்தாலும் ஒவ்வொரு வீட்டிலும் புகுந்து ஒருவர் பாக்கியில்லாமல் ஆதரித்து அவரவர்கட்குத் தகுந்தபடி போகபாக்யங்களைச் சேர்ப்பித்துவரும் எங்கள் அன்பனது அழகை எப்படி புகழ்வோம். எங்கள் ஆனந்தத்தைத் தனதானந்தமாய் எங்கள் மேன்மையைத் தனது மேன்மையாய் எங்கள் கவலையைத் தனது கவலையாய்க்கொண்டு கடாக்ஷித்துவரும் இக்கருணாநிதியின் செய்கை இவரொருவருக்கே சொந்தமானது. சகல லோகங்களும் இவரை நாதனாய் அடையத் தவம் புரியும்போது சொந்தஜனங்

களான நாங்கள் இவரை ராஜாவாகப் பார்க்க என் ஆசைப்படமாட்டோம். இவரது துரைத் தனத்தில் பிதாவுக் கடங்கிப் பிள்ளைகளும், பதிக்குக் கீழ் பார்யைகளும், ஆசார்யனுக்கடிமைப்பட்டுச் சிஷ்யர்களும் அரசனே தெய்வமென்று நினைத்துப் பிரஜைகளும் பழமையான தர்ம மார்க்கத்தைச் சிறிதும் நழுவவிடாமல் தங்கள் நாளைவிட அநேகமடங்கதிகமாய் ஒருமித்துச் சிறந்து வாழ்வார்களென்பது நிச்சயம். இந்த ஸ்ரீராமன் சீக்கிரத்தில் பட்டாபிஷேகம்கொள்ளவேண்டும். எல்லோரும் ஆசை தீரப்பார்த்துக் களிக்கவேண்டும், என்ற ஒரு கோரிக்கைதான் எங்கள் எல்லோருக்கும். இதற்காக நாங்கள் சுற்றாத கோவில் இல்லை: பூஜிக்காத தெய்வமில்லை, புகழாத பெரியோரில்லை, ஆடாத தீர்த்தமில்லை, அலையாத ஸ்தலமில்லை, எடுக்காத விரதமில்லை, ஏற்றாத விளக்கில்லை, நிறைவேற்றாத பிரார்த்தனை இல்லை. மகாராஜ! கையெடுத்துக் கும்பிடுகிறோம். இந்த வரன் தரவேண்டும்" என்றனர். மகாராஜா கொண்ட சந்தோஷத்திற்களவில்லை. உடனே வஸிஷ்ட மகாமுனியைப் பார்த்து ஸமஸ்த ஜனங்களும் கேட்க "நாளைக்கபிஷேகம், சகலமுமின்றைக்கே ஸஜ்ஜமாகவேண்டும்" என்று வசனித்தார். ஸமஸ்த ஸம்பாரங்களும் சேகரிக்கப்பட்டன. வீதிகளெல்லாம் மெழுகிக் கோலமிடப்பட்டன, மலர்த் தோரணங்கள் கட்டப்பட்டன, கொடிகள் எங்கெங்கும் பறந்தன, பட்டத்து யானை சிங்காரிக்கப்பட்டது, பட்டத்துக் குதிரை பூஷிக்கப்பட்டது. ஜனங்கள் யாவரும் தங்கள் தங்கள் வீடு சென்று விதம் விதமாய் அலங்கரித்துக்கொண்டு இந்த மஹோத்ஸவத்தைக் கண்ணாரப் பார்த்துக் கிருதார்த்தர்கள் ஆவோம் என்ற மனோரதத்துடன் க்ஷணத்தை யுகம்போல் பாவித்து அபிஷேக முகூர்த்தத்தை எதிர்பார்த்தார்கள்.

ஆர்யமத தர்மம்.

[தஞ்சாவூரில் விஜயம் செய்திருக்கும் கும்பகோணம் வாஸிகளும் காஞ்சிபுரம் ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளுமான ஸ்ரீபரமஹம்ஸ பரிவ்ராஜகாசாரியவர்ய ஸ்ரீமத்சங்கரபகவத்பாதாசாரிய ஸ்வாமிகளுடைய நேர் ஸ்தானத்தில் அபிஷிக்தர்களுமாகிய ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களுக்காக அவர்கள் ஆக்ஞை முன்னிட்டு ஷை மடம் ஆஸ்தான பண்டிதரும் அத்வைதசபை பண்டிதருமான மஹாமஹோபாத்தியாயர் வேதாந்த கேசரி பிரம்மஸ்ரீ ப. கணபதிசாஸ்திரிகள் அவர்களால் தஞ்சையில் ஷை ஸ்வாமிகளவர்கள் விஜயம் செய்திருந்த சிரேயஸ் சத்திரத்தில் செய்த உபந்நியாஸத்தின் சுருக்கம்.]

ஆர்யமத பிரமாணங்களும் உபபிரமாணங்களும்

லோகத்தில் பலவிதமான உட்பிரிவுகளுடன் விளங்கிவரும் நமது ஆர்யமதத்திற்கு தர்மம் முதலிய பரோக்ஷமான விஷயங்களை அறிவிக்கும் பிரமாணங்களுக்குள் வேதமென்பது முதலான பிரமாணமாய் வைதிகர்கள் யாவரும் அங்கீகரித்த விஷயம்.

2. வேதமானது ஈசுவரனால் செய்யப்பட்டதென்று சிலரும், முக்கியமான பூர்வோத்திர மீமாம்ஸகர்கள் எந்த கல்பங்களிலும் ஒரேவிதமாய் வேதமிருப்பதால் அது நித்தியமென்றும் அங்கீகரித்திருக்கிறார்கள்.

3. இதில் பலவிதமான உருப்புகளுடைய சராசராத்மகமான பிராணிகளால் நிறைந்த இவ்வுலகமென்னும் ஆச்சரியமான சித்திரத்தை பிரமதேவன் உண்டுபண்ணத்தக்க ஞானத்தை ஆதியில் வேதத்திலிருந்து அடைந்தார் யென்று நமது வேதசாஸ்திரங்களால் தெரியவருகிறது. இந்தக் காரணங்கொண்டே வேதமானது ஜகத்து

களை உண்டுபண்ணு முன்னமே இருந்திருக்கவேண்டு மென்று வெளியாகிறது.

4. வேதம் ரிச், எஜுர், ஸாம, அதர்வ என்று நான்கு பெயருடையதாயிருந்தாலும் சுருக்கமாய் மந்திரமென்றும் ப்ரமாணமென்றும் இருவகைப்படும்.

5. இவ்விரண்டு பாகமும் தாரதம்மியமின்றி ப்ரமாணம் இதில் மந்திரம் வலியப் பிரமாணமாயும், ப்ரமாண பாகம் அதற்கு கீழ்பட்டதாயும் தாக்காலம் சிலர்களின் அபிப்பிராயம் நமது பிராசீன சாஸ்திரத்திற்கு ஒத்ததல்ல. வேதங்கள் ஒரே விதமான பிரமாணந்தான். ஆனால் வேறு விதமான சில பிரிவுகள் மீமாம்ஸையில் உண்டு.

6. உபப் பிரமாணங்களாவன :—ஸ்மிருதி, இதிஹாஸம், புராணம் மற்றுமுள்ள கிரந்தங்களும் இவைகள் வேதத்தால் வெளியிடப்பட்ட அர்த்தத்தையே அவ்வேத பாகம் தெரியாதவர்களுக்கும் நேரில் அதில் அதிகாரமில்லாதவர்களுக்கும் தெரிவிக்கும் பொருட்டு உபகாரார்த்தமாய் நமது மகரிஷிகளால் செய்யப்பட்டது.

7. இவைகளில் வேதத்தையே பிரமாணமாகக் கொண்டு வெளியிடப்பட்ட மன்வாதிஸ்மிருதிகள் முக்கியமாயும், மற்ற காபிலாதி ஸ்மிருதிகள் அதற்கு அடுத்தபடியாயும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஒருக்கால் மன்வாதிஸ்மிருதிக்கும் நமக்குத் தெரிந்த வேத பாகத்துக்கும் விரோதம் தோற்றுமாகிலும் மன்வாதி ஸ்மிருதியை தள்ளிவிடாமல் வேதத்திலேயே பரஸ்பர விரோதமிருக்கிற இடத்துக்கு சமாதானம் செய்வதுபோல் சமாதானம்பண்ண வேண்டுமென்பது நமது பூர்வாசாரியர்களின் உட்கருத்து. இது பட்டவார்த்திகத்திலுள்ளது.

II. வேதாந்தமுள்படஷட்தரிசனங்கள்.

1. இவ்விதமான பிரமாணங்களால் வெளியான தர்சனங்கள் இரண்டு. அதாவது ஜைமினியம், வையாஸிகம் இவைகள்தான் பூர்வ மீமாம்சமென்றும் உத்தர மீமாம்சமென்றும் அல்லது தர்மசாஸ்திரம், பிரம்ம சாஸ்திரம் என்றும் சொல்லப்படும்.

2. இவ்விரண்டைத் தவிர பாக்கி தர்சனங்கள் நான்கு—காபில, காணாத, பாதஞ்சல, பாணினீய—இதில் காபிலம் சாங்கிய சாஸ்திரமென்றும், காணாதமென்பது தர்க்க சாஸ்திரமென்றும், பாதஞ்சலமென்பது யோக சாஸ்திரமென்றும், பாணினீயமென்பது சப்த சாஸ்திரமென்றும், சொல்லப்படும். கௌதமியமாகியந்யாய சாஸ்திரமும் தர்க்க சாஸ்திரத்தைச் சேர்ந்ததே.

3. இந்நான்கு தர்சனங்களிலும் பந்தமோக்ஷங்களைப்பற்றி வெவ்வேறான சித்தாந்தங்கள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

4. இந்நான்குகளிலும் முக்கியமான ஆத்மசுவரூபத்தின் தத்துவங்களைப்பற்றியும் சில சாதனங்களைப்பற்றியும் சற்றேறக்குறைய நமது வேதாந்த சித்தாந்தத்திற்கு நெருங்கியது காபிலம், பாதஞ்சலம்; இவ்விரண்டு தர்சனங்களுமே.

5. ஆனால் சில சுருதிகளிலும் ஸ்மிருதிகளிலும் சாங்கியமென்றும் யோகமென்றும் உபயோகப்படுத்திய பதங்களுக்கு வேதாந்த சித்தாந்தத்தை அனுசரித்து வேறுவிதமான அர்த்தங்கள் ஆசார்யர்களால் சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய கீழ்காட்டிய தர்சனங்கள் அர்த்தமல்ல.

6. வேதத்தையே முக்கியப்ரமாணமாக கைகொண்

டஜைமுனீய, வையாசிக, என்ற இரண்டு தர்சனங்களில் வையாசிகமென்ற வேதாந்த தர்சனத்தின் சித்தாந்தத்திற்கு விரோதமாய் பல அர்த்தங்கள் ஜைமுனீய சித்தாந்தத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனல் அவைகள் பரமார்த்த தசையில் நமக்கு அங்கீகரிக்கத் தக்கதல்ல. ஸம்ஸாரதசையிலுள்ள பதார்த்தங்களைப் பற்றியும் வேதத்தின் தாத்பரியங்களைக் கண்டுபிடிக்கக் காட்டிய பல நியாயங்களைப்பற்றியும் ஜைமுனீயத்தில் சொல்லியதை வேதாந்ததர்சனத்தைக் கைக்கொண்ட ஆர்யர்களாகிய நம்பூர்வாசாரியர்கள் அங்கீகரித்திருக்கிறார்கள்.

7. கீழ் சொல்லப்பட்ட ஐந்து தர்சனங்களைக் காட்டிலும் இன்னும் பலவிதமான சாஸ்திரங்களும் அதின் மூலமாகிய மதங்களும் அவைகளை பின்தொடரும் பல ஜனங்களும் தத்காலம் உலகத்தில் இருப்பவர்களுமுண்டு அவ்விதமான மதங்களும் அதற்கு ஏற்பட்ட சாஸ்திரங்களும் ப்ராணிகளின் சிரேயஸ்ஸைப் பொருந்தியே ஏற்பட்டதேயொழிய ஒருக்காலும் பிரயோஜனமற்றதல்ல வென்றும் நமது பூர்வாசார்யர்களின் கருத்து. நமக்கும் அதே அபிப்பிராயம்தான், ஆனல் நமது பெரியோர்களால் மற்ற தர்சனங்கள் யாவும் ஸாதன கோடியிலும் வேதாந்தமென்கிற வையாசிக தர்சனமொன்றே மோக்ஷார்த்தமாய் ஏற்பட்டதென்றும் விசேஷமாய் அந்த தர்சனத்தையே உலகத்தில் பரவச்செய்தார்கள்.

III. வேதாந்தத்தின் உட்பிரிவுகளும் அத்வைத வேதாந்தத்தின் கர்ம, பக்தி, ஞானயோகங்களும்.

1. வேதாந்த தர்சனம் ஒன்றாயிருந்தாலும் அது நமது மூன்று ஆசார்யர்களால் மூன்று விதமாய் பாஷ்யம் செய்யப்பட்டு மூன்றுவிதமான சித்தாந்தத்தை வெளியிடு

வதாக எழுதப்பட்டு பிரசுரம் செய்தது தற்காலம் நமது தேசத்தில் பெரும்பாலுமுள்ளது.

2. ஒரே சாஸ்திரத்தில் ஒன்றோடொன்று சேராத மூன்றுவிதமான சித்தாந்தம் முக்கியமாய் வெளிப்படுத்தப் பட்டதென்பது ஒரு சமயமும் பொருந்தாது. முக்கிய அபிப்ராயம் ஒன்றிலும் மற்றவைகளில் அதற்கு சாதக மான அவாந்தர அபிப்பிராயமும் இருக்குமானால் இதில் விரோதமில்லை. இதில் அத்வைதிகளின் அபிப்பிராயமா வது வேதாந்த தர்சனத்துக்கு அத்வைதத்தில் முக்கிய கருத்து. அதற்கு வேண்டி த்வைத விசிஷ்டாத்வைதங்க ளில் அவாந்தரமான கருத்தென்பதுதான். அந்தந்த மதஸ்தர்களுக்கு இதில் வேறே அபிப்பிராயமிருந்தாலும் அத்வைத மதஸ்தர்களாகிய நம்பூர்வாசார்யர்களின் அபிப் பிராயமும் முன் சொன்னதே.

3. இதில் ஒவ்வொரு பாஷ்யக்காரர்களும் தாம் காட் டிய சித்தாந்தத்திற்கு பிரமாணமாக உபநிஷத்துக்களையும் ஸ்மிருதி புராணங்களையும் உதாஹரித்திருக்கிறார்கள்.

(இன்னும் வரும்.)